# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# மானியக் கோரிக்கை

# எண் 34

# அறிவிப்புகள்

# 2020-2021

# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் **35** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எஸ்.பி.வேலுமணி

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்

**1. திருச்சி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட மற்றும் அபிவிருத்தி சார்ந்த பகுதிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.238 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டமும், அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் ஏற்கனவே செயல்பாட்டிலிருந்து பழுதடைந்துள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தை புனரமைப்பு செய்யவும் ரூ. 238 கோடி மதிப்பீட்டில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2. திருச்சி நகர அபிவிருத்தி சார்ந்த பகுதிகளுக்கான குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் ரூ.53.79 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சிராப்பள்ளி சீர்மிகு நகர அபிவிருத்தி சார்ந்த பகுதிகளில் சீரான முறையில் தடையின்றி குடிநீர் வழங்குவதற்கும், கடைக்கோடி இணைப்பு வரை சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்வதற்கும், நுகர்வோருக்கு தேவைப்படும் குடிநீரின் அளவை கணக்கிட்டு வழங்குவதற்கும், குடிநீர் விநியோக பணி சீரமைப்பதற்கும் ரூ.53.79 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும்.

## 3. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள 40 குளங்கள் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளால் பராமரிக்கப்பட்டு வரும் குளங்களில் 40 குளங்களை சீரமைக்கும் பணிகள் மூலதன மானிய நிதி/ ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம்/ கூட்டாண்மை சமூக பொறுப்பு ஆகிய திட்டங்களின் கீழ் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

## 4. ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகளில் ரூ.127.75 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற வடிவமைப்பு மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நகர மேலாண்மையில் புதிய மாதிரிகள் / அணுகுமுறைகளை கையாள்வதற்காக ஈரோடு, வேலூர் மற்றும் ஓசூர் மாநகராட்சிகளில் கடந்த 5 ஆண்டுகளாக செயல்படுத்தப்படும் திட்டங்களின் ஒரு பகுதியாக, இம்மாநகராட்சிகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் நகர்ப்புற வடிவமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன் TNSUDP-ன் கீழ் ரூ.127.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். அதன் விவரம் பின்வருமாறு:

1. ஈரோடு மாநகராட்சியில் பன்னீர்செல்வம் பூங்கா மற்றும் பெரியார் நகர் பகுதியில் பிரதான சாலைகளை சீர்மிகு சாலைகளாக மேம்படுத்துதல், சாலை சந்திப்புகளை மேம்படுத்துதல், பேருந்து நிலைய நிறுத்தங்களை நவீனப்படுத்துதல் மற்றும் சாலையோர

கடைகளை முறைப்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ.33.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

2. வேலூர் மாநகராட்சியில் காந்தி நகர் பகுதியில் 10 சாலைகளை மேம்படுத்துதல், கால்வாய் சீரமைப்பு மற்றும் இதர பணிகள் ரூ.65.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

3. ஓசூர் மாநகராட்சியில் ராமநாயக்கன் ஏரி மற்றும் அதன் மேல் பகுதியில் உள்ள 3 ஏரிகளும் அவற்றின் வாய்க்கால்களும் தூர் வாருதல் புனரமைப்பு செய்தல் ஆகிய பணிகள் ரூ.28.35 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**5. 34 நகரங்களுக்கு கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்கி சுத்தம் செய்ய 34 ரோபோட் இயந்திரங்கள் ரூ.35 கோடி செலவில் வாங்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கழிவு நீர் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகளில் ஏற்படும் அடைப்புகளை நீக்குவது மற்றும் சுத்தம் செய்வதற்கு பாதாள சாக்கடைத் திட்டம் முடிவுற்று பயன்பாட்டில் உள்ள 34 நகரங்களில், ஒரு நகரத்திற்கு ஒரு ரோபோட் இயந்திரம் வீதம், 34 இயந்திரங்கள், ரூ.35 கோடி செலவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வாங்கப்படும்.

**6. கோயம்புத்துார் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.175 கோடி மதிப்பீட்டில் 152.95 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கோயம்புத்துார் மாநகராட்சியில் கடந்த 2007-ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் பாதாள சாக்கடை திட்டம் 60 வார்டுகளில் ரூ.469.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக, விடுபட்ட பகுதிகளில் சுமார் 152.95 கி.மீ. நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டம் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் மூலம் ரூ.175 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**7. மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தேங்கி இருக்கும் குப்பைகளை அகற்றி உயிரி அகழ்வு முறையில் (Bio-Mining) நிலங்கள் மீட்டெடுக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 86 நகராட்சிகள் மற்றும் 9 மாநகராட்சிகளில் தேங்கி இருக்கும் குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுத்தல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இதன் தொடர்ச்சியாக, எஞ்சியுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் வரும் நிதியாண்டில் பல்வேறு நிதி ஆதாரங்களைக் கொண்டு தேங்கி இருக்கும் குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி நிலத்தை மீட்டெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**8. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், பல்வேறு பகுதிகளில் சேகரமாகும் குப்பை கழிவுகள்/ திடக்கழிவுகள் அகற்றுதல் போன்ற அத்தியாவசிய அடிப்படை பணிகளில் ஈடுபட்டு வருவதால், அப்பணியாளர்களின் உடல்நலமம் மட்டுமின்றி அவர்களது குடும்பத்தினரின் உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட கால இடைவெளியில் அவர்களுக்கு இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

**9. மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் வாரிசுகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் குடும்ப நலத்தினை கருத்தில் கொண்டு, அவர்களது வாரிசுகளின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும்.

**10. ஒவ்வொரு மாநகராட்சிக்கும், தலா ஒரு கழிவறை வீதம் அனைத்து மாநகராட்சிகளிலும் குளிரூட்டப்பட்ட கழிவறைகள் பரிட்சார்த்த முறையில் (Pilot basis) அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நவீன வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட கழிவறைகள், ஒரு மாநகராட்சிக்கு ஒரு கழிவறை வீதம், அனைத்து மாநகராட்சிகளிலும் பரிட்சார்த்த முறையில் (Pilot basis) பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் அமைக்கப்படும்.

**11. பெருநகர சென்னை மாநகராட்சியின் பாதசாரி போக்குவரத்து நெரிசலை எளிதாக்க, 7 இடங்களில் நகரும் படிகட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகராட்சியின் எதிர்கால தேவைகளுக்கு நிலையான போக்குவரத்து மேலாண்மை முறையை வழங்கும் நோக்கில், பொதுமக்கள் எளிதாக சாலையை கடக்கும் வண்ணம், பாதசாரி போக்குவரத்து நெரிசலை எளிதாக்க சென்னை மாநகரின் முக்கியமான சாலை சந்திப்புகளான **1.** லஸ் சர்ச் சாலை – லஸ் கார்னர், **2.** எல்.பி .சாலை – அடையாறு பணிமனை, **3.** சர்தார் படேல் சாலை – அண்ணா பல்கலைக்கழகம் , **4.** ஆற்காடு சாலை – விஜயா ஃபோரம் மால், **5.** அண்ணா நகர் **2**வது நிழற் சாலை – ஐயப்பன் கோவில், **6.** அண்ணா நகர் **3**வது நிழற் சாலை – கந்தசாமி கல்லூரி, 7. புரசைவாக்கம் நெடுஞ்சாலை – அபிராமி மெகா மால் ஆகிய 7 இடங்களில் படிகட்டுகள்

மற்றும் நகரும் படிகட்டுகளுடன் கூடிய நடைமேம்பாலம் பெருநகர சென்னை மாநகராட்சியின் சொந்த நிதியிலிருந்து ரூ.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 12. பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி, 200 ஏக்கர் நிலம் மீட்டெடுக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலங்கள் 9 முதல் 15 வரை சேகரிக்கப்பட்ட குப்பைகள் உயிரி அகழ்வு தொழில்நுட்பம் முறையில் அகற்றி, 200 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை மீட்டெடுப்பதற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

**13. பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறந்த முன்மாதிரியான நவீன வணிக வளாகங்கள் கட்டுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களில் உள்ள 153 பழைய வணிக வளாகங்களை இடித்து விட்டு அந்த இடங்களில் நவீன முறையில் பல அடுக்கு தள வாகனங்கள் நிறுத்தம், அரசு அலுவலகங்கள், கடைகள், உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்கு பகுதிகள் போன்ற அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய சிறந்த முன்மாதிரியான நவீன வணிக வளாகங்கள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறிவதற்கு ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**14. சென்னை மாநகரில் பல்வேறு நிலையில் வெளியேறும் நீரின் மறுசுழற்சி பயன்பாடு பற்றிய கணக்கெடுக்கும் பணி ரூ. 8 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகரில் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் மற்றும் நிலத்தடி நீர் மூலம் இதர பயன்பாடுகளுக்கான தேவைகளை கண்டறிந்து, சீரான குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏதுவாக, சென்னை மாநகரில் உள்ள அனைத்து கட்டடங்களிலும் பயன்பாட்டில் உள்ள கிணறுகளின் நிலத்தடி நீர்ப் பயன்பாடு தகவல், மழைநீர் கட்டமைப்புகளின் தற்போதைய நிலை பற்றிய தணிக்கை மற்றும் வணிகக் கட்டடங்கள், சமையலறை/ குளியலறையிலிருந்து வெளியேறும் நீர் மறு சுழற்சி பயன்பாடு ஆகியவற்றை கணக்கெடுக்கும் பணிகள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் வாரிய நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும்.

**15. சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு அதிநவீன புதுமை தொழில்நுட்ப ஆய்வகம் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒரு கட்டடத்தின் நீண்ட ஆயுள் திறனானது, அதில் பயன்படுத்தப்படும் கட்டுமான பொருட்களின் தரத்தை சார்ந்துள்ளது. அத்தகைய கட்டுமான பொருட்களான மணல், செங்கல், இரும்பு கம்பி, ஜல்லி, நீர் ஆகியவற்றின் தரத்தை ஆய்வு செய்வதற்கு இந்திய தர நிர்ணய விதிமுறைகளின்படி பல்வேறு அளவுகூறு சோதனைகளை மேற்கொள்வதற்கு தேவையான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் கருவிகளை உள்ளடக்கிய அதிநவீன புதுமை தொழில்நுட்ப ஆய்வகம் ஒன்று மூலதன மானிய நிதியின் கீழ் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**16. வில்லிவாக்கத்தில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் "நீர் கருத்து பூங்கா மற்றும் அருங்காட்சியகம்", முதற்கட்டமாக ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலான அனைவருக்கும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாடுகளான, நீராதாரங்களை திரட்டுதல், குடிநீர் பகிர்மானம் மற்றும் கழிவுநீர் அமைப்புகளின் பராமரிப்பு, குடிநீர் மேலாண்மை, நீர் சேகரிப்பு மற்றும் உபயோகம் ஆகிய பல்வேறு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், வில்லிவாக்கத்தில் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் "**நீர் கருத்துப் பூங்கா மற்றும் அருங்காட்சியகம்**" அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, வாரிய நிதியின் கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 17. வேலூர் மாவட்டம் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேலூர் மாவட்டத்திலுள்ள காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்பேடு மற்றும் 88 ஊரகக் குடியிருப்புகளுக்கு 52000 மக்கள் பயன்பெறும் வகையில், புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**18. மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 391 ஊரகக் குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மதுரை மாவட்டத்தைச் சார்ந்த 4 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 391 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் விரைவில் அமையவிருக்கும் அகில இந்திய மருத்துவ விஞ்ஞான கழகம் மற்றும் மருத்துவ கல்லூரிக்கான 5,54,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**19. ஒட்டன்சத்திரம் நகராட்சி, திண்டுக்கல் மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் திண்டுக்கல், திருப்பூர் ஆகிய மாவட்டங்களின் வழியோர ஊரகக் குடியிருப்புகளைச் சார்ந்த **6,19,000** மக்கள் பயன்பெறும் வகையில் திருமூர்த்தி அணையை நீராதாரமாகக் கொண்டு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**20. ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி ஊராட்சியில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி ஊராட்சியிலுள்ள 39 ஊரகக் குடியிருப்புகளுக்கான 40,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## 21. நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி ஒன்றியத்தில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி ஒன்றியத்திற்குட்பட்ட 49 ஊரகக் குடியிருப்புகளுக்கான 25,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**22. திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்றாம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களுக்கான புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.151 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை, கந்திலி, திருப்பத்தூர் மற்றும் நாட்றாம்பள்ளி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 782 ஊரகக் குடியிருப்புகளுக்கான 2,10,000 மக்கள் பயன்பெறும் வகையில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.151 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**23. திண்டுக்கல் மாநகராட்சி, 6 பேரூராட்சிகள், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 72.65 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மாநகராட்சி, 6 பேரூராட்சிகள், கரூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 816 ஊரகக் குடியிருப்புகளுக்கான 7,14,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை மேம்படுத்தி குடிநீர் வழங்கும் திட்டம் ரூ. 72.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 24. ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.48.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் ஒன்றியங்களை சார்ந்த 6 ஊராட்சிகளிலுள்ள 125 ஊரகக் குடியிருப்புகளுக்கான 49,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.48.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**25. தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.275 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் மற்றும் அம்மாபேட்டை ஒன்றியங்களைச் சார்ந்த 479 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.275 கோடி மதிப்பீட்டில் 1,80,000 மக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

**26. திருநெல்வேலி மாவட்டம் பாப்பாக்குடி மற்றும் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம் பாப்பாக்குடி மற்றும் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 23 ஊரகக் குடியிருப்புகளுக்கான 20,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.27 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**27. திருச்சி மாவட்டம், லால்குடி மற்றும் புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருச்சி மாவட்டம், லால்குடி மற்றும் புல்லம்பாடி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 200 ஊரகக் குடியிருப்புகளுக்கான 1,26,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.65 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**28. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஒன்றியங்கள், திருவிடைமருதூர் மற்றும் வேப்பத்தூர் பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள் ஒன்றியங்களைச் சார்ந்த 124 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் திருவிடைமருதூர், வேப்பத்தூர் பேரூராட்சிகளைச் சார்ந்த 2 குடியிருப்புகளுக்கான 98,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 45 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 29. 8 பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து ரூ.131 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட களக்காடு, நாங்குநேரி, ஏர்வாடி, மூலக்கரைப்பட்டி, திருக்குறுங்குடி மற்றும் ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட வடக்குவள்ளியூர், திசையன்விளை மற்றும் பணகுடி ஆகிய 8 பேரூராட்சிகளை ஒருங்கிணைத்து ரூ.131 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

## 30. 8 பேரூராட்சிகளில் குடிநீர் மேம்பாட்டு பணிகள் மற்றும் தனிக்குடிநீர் திட்ட பணிகள் ரூ.25.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 8 பேரூராட்சிகளில் உறைகிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, குடிநீர் குழாய்கள் அமைத்தல் மற்றும் நீட்டித்தல் போன்ற குடிநீர் மேம்பாட்டு திட்ட பணிகள் மற்றும் தனிக்குடிநீர் திட்டப் பணிகள் ரூ.25.60 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

**31. ரூ.40.80 கோடி மதிப்பீட்டில் 17 பேரூராட்சிகளில் உள்ள சந்தைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, விவசாயிகள் மற்றும் வியாபாரிகளின் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கிலும், அவர்கள் தங்களது பொருட்களை ஒரே இடத்தில் விற்பனை செய்யவும், அதன் மூலம் பேரூராட்சிகளின் வருவாயினை பெருக்கிட மூலதன மானிய நிதியின் கீழ் ரூ.40.80 கோடி மதிப்பீட்டில் 17 பேரூராட்சி சந்தைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**32. 36 மாவட்டங்களில், ஒரு பேரூராட்சிக்கு ஒரு எரியூட்டும் கலன் வீதம் 36 எரியூட்டும் கலன்கள் (Incinerator) ரூ.18 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேலும் மேம்படுத்தும் விதமாக பேரூராட்சிகளில் தினசரி சேகரிக்கப்படும் திடக் கழிவுகளில் மக்காத உலர் கழிவுகளை (Dry Waste) பாதுகாப்பான முறையில் கழிவு செய்ய 36 மாவட்டங்களில், ஒரு பேரூராட்சிக்கு ஒரு எரியூட்டும் கலன் வீதம் 36 எரியூட்டும் கலன்கள் (Incinerator) தொகுப்பு முறையில் ரூ.18 கோடி மதிப்பீட்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

## 33. ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் 8 பேரூராட்சிகளில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கப்படும்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இயற்கை எய்தியவர்களை திறந்தவெளியில் எரியூட்டுவதால், கார்பன்டை ஆக்சைடு, கார்பன் மோனாக்சைடு, டயாக்சின் போன்ற நச்சு வாயுக்கள் வெளியேறி சுற்றுச் சூழல் மாசு ஏற்பட்டு வருவதனை தவிர்க்கும் பொருட்டு 8 பேரூராட்சிகளில், நவீன எரிவாயு தகன மேடைகள் ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**34. 7 பேரூராட்சிகளில் பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 7 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பேருந்து நிறுத்துமிடம், நடைமேடைகள், குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் பாலூட்டும் அறை போன்ற அனைத்து வசதிகளுடன் கூடிய பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**35. 50 பேரூராட்சிகளில் உரக்கிடங்குகளில் உள்ள பழைய குப்பை கழிவுகளை உயிரி அகழ்வு முறையில் அகற்றி ரூ.20.57 கோடி மதிப்பீட்டில் நிலங்கள் மீட்டெடுக்கப்படும்.**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மூன்றாம் கட்டமாக, 50 பேரூராட்சிகளில் உரக்கிடங்குகளில் தீர்வு செய்யப்படாமல் உள்ள பழைய குப்பை கழிவுகள் ரூ.20.57 கோடி மதிப்பீட்டில் உயிரி அகழ்வு முறையில் (Bio-Mining) முழுமையாக அகற்றி நிலங்கள் மீட்டெடுத்து வள மீட்பு பூங்காக்களாக தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும்.

எஸ்.பி.வேலுமணி
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்